## வகுப்பு - 7 - பருவம் - 1 - தாவரவியல்

## 5 - தாவரங்களின் இனப்பெருக்கம் மற்றும் மாற்றுருக்கள்

71. தரையிலிருந்து தோன்றாமல் தரைமட்டத்திற்கு மேல் தண்டு அல்லது கிளையிலிருந்து தோன்றும் வேர்கள் _______ என அழைக்கப்படுகின்றன.

(1) முள்ளங்கியின் கதிர் வடிவ வேர் (2) கேரட்டின் கூம்பு வடிவ வேர்

(3) பீட்ரூட்டின் பம்பர வடிவ வேர் (4) மாற்றிட வேர்கள்

72. பின்வருவனவற்றுள் எது மாற்றிட வேர் அல்ல?

(1) தூண் வேர்கள் (2) தொற்று வேர்கள்

(3) முட்டு வேர்கள் (4) முள்ளங்கியின் கதிர் வடிவ வேர்

73. சதுப்பு நிலங்களில் காணப்படும் சுனாமி போன்ற பேரலைகளைத் தடுக்கும் மரவகை எது?

(1) மாமரம் (2) தென்னை மரம் (3) அவிசீனியா (4) ஆலமரம்

74. வெலமன் எனப்படும் உறிஞ்சு திசு காணப்படும் தாவரம் எது?

(1) கஸ்குட்டா (2) மாமரம் (3) ஆலமரம் (4) வாண்டா

75. தொற்றுத் தாவரமாக மரங்களில் வளரும் தொற்று வேர்களைக் கொண்ட தாவரம் _______.

(1) வாண்டா (2) கஸ்குட்டா (3) வாழைமரம் (4) பனை மரம்

76. பின்வருவனவற்றுள் ஒட்டுண்ணித் தாவரம் எது?

(1) நெப்பந்தஸ் (2) கஸ்குட்டா (3) வாண்டா (4) தென்னை மரம்

77. வறண்ட நிலத்தாவரங்களில் முட்களாக மாறியுள்ள தாவரப் பகுதி எது?

(1) இலை (2) தண்டு (3) வேர் (4) மலர்

78. பின்வருவனவற்றுள் இலைத்தொழில் தண்டுடைய தாவரம் எது?

(1) சப்பாத்திக் கள்ளி (2) முருங்கை மரம் (3) தண்டுக் கீரை (4) அரச மரம்

79. பொருத்துக.

a) ஓடுதண்டு - i. கிரைசாந்திமம்

b) ஸ்டோலன் - ii. வெங்காயத்தாமரை

c) தரைகீழ் ஓடுதண்டு அல்லது சக்கர் - iii. காட்டு ஸ்ட்ராபெர்ரி

d) குட்டையான ஓடுதண்டு - iv. வல்லாரை

LIVEWORKSHEETS

(1) a - ii b - iv c - i d - iii (2) a - iv b - iii c - i d - ii

(3) a - iii b - iv c - ii d - i (4) a - I b - ii c - iii d - iv

80. கீழ்க்கண்டவற்றுள் தரை மேல் தண்டின் மாற்றுரு எது?

(1) ஓடு தண்டு (2) மட்டநிலத் தண்டு

(3) இலைத்தொழில் தண்டு (4) ஸ்டோலன்

81. பின்வருவனவற்றுள் பொருந்தாதது எது?

(1) ஓடு தண்டு (2) ஸ்டோலன் (3) சக்கர் (4) கந்தம்

82. பொருத்துக.

a) மட்டநிலத்தண்டு - i. பூண்டு, வெங்காயம்

b) கந்தம் - ii. உருளைக்கிழங்கு

c) கிழங்கு - iii. இஞ்சி, மஞ்சள்

d) குமிழம் - iv. சேனைக்கிழங்கு, சேப்பங்கிழங்கு

(1) a - iii b - iv c - ii d - i (2) a - ii b - I c - iii d - iv

(3) a - iii b - iv c - i d - ii (4) a - i b - ii c - iii d - iv

83. பொருத்துக.

a. முட்கள் - i. நெப்பந்தஸ்

b. பற்றுக் கம்பிகள் - ii. அகேஷியா

c. இலைத்தொழில், இலைக்காம்பு (அல்லது) பில்லோடு - iii. செங்காந்தள், பட்டாணி

d. கொல்லிகள் - iv. கள்ளி வகைகள்

(1) a - ii b - iv c - I d - iii (2) a - ii b - i c - iii d - iv

(3) a - iii b - iv c - ii d - i (4) a - iv b - iii c - ii d - ii

84. கதிர் வடிவத்தில் காணப்படும் ஆணி வேரின் மாற்றுரு ______.

(1) முள்ளங்கி (2) கேரட் (3) டர்னிப் (4) பீட்ரூட்

85. குறிஞ்சி மலர் எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கிறது?

(1) ஒவ்வொரு ஆண்டும் (2) 2 ஆண்டுகள்

(3) 12 ஆண்டுகள் (4) 20 ஆண்டுகள்

86. மலரின் இன்றியமையாத பாகங்கள் ______.

LIVEWORKSHEETS

(1) புல்லி வட்டம், அல்லி வட்டம் (2) புல்லி வட்டம், மகரந்தத்தாள் வட்டம்

(3) புல்லி வட்டம், சூலக வட்டம் (4) மகரந்தத்தாள் வட்டம், சூலக வட்டம்

87. இலைகள் மூலம் இனப்பெருக்கம் செய்யும் தாவரம்?

(1) பிரையோஃபில்லம் (2) வெங்காயம் (3) வேம்பு (4) இஞ்சி

88. ஸ்போர்கள் மூலம் நடைபெறும் இனப்பெருக்கம் என்பது?

(1) பாலிலா இனப்பெருக்கம் (2) பாலினப்பெருக்கம்

(3) உடல இனப்பெருக்கம் (4) பெண் இனச்செல்கள்

89. பூக்கும் தாவரங்களில் இனப்பெருக்க உறுப்பு?

(1) கனி (2) விதை (3) தண்டு (4) மலர்

90. மலரின் மூன்றாவது பாகம் எது?

(1) புல்லி வட்டம் (2) மகரந்தத்தாள் வட்டம்

(3) அல்லி வட்டம் (4) சூலக வட்டம்

91. **கூற்று:** புல்லி வட்டம், அல்லி வட்டம் மலரின் துணை பாகங்கள் ஆகும்.

**காரணம்**: அவை நேரடியாக இனப்பெருக்கத்தில் பங்கேற்பதில்லை.

(1) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்

(2) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல

(3) கூற்று சரி, காரணம் தவறு

(4) கூற்று தவறு, காரணம் சரி

92. **கூற்று:** மகரந்தத்தாள் வட்டம், சூலக வட்டம் மலரின் இன்றியமையாத பாகங்கள் ஆகும்.

**காரணம்**: இவை இரண்டும் இனப்பெருக்கத்தில் பங்கு கொள்வதில்லை.

(1) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்

(2) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல

(3) கூற்று சரி, காரணம் தவறு

(4) கூற்று தவறு, காரணம் சரி

93. கீழ்க்கண்டவற்றில் மானோஷியஸ் தாவரம் எது?

(1) பனை (2) பப்பாளி (3) தென்னை (4) மாமரம்

LIVEWORKSHEETS

94. கீழ்க்கண்டவற்றில் ஈரில்லத் தாவரம் எது?

(1) பப்பாளி (2) மக்காச்சோளம் (3) தென்னை (4) மாமரம்

95. பொருத்துக.

a. மானோஷியஸ் - (i) அயல் மகரந்தச் சேர்க்கை

b. டையேஷியஸ் - (ii) தன் மகரந்தச் சேர்க்கை

c. ஆட்டோகேமி - (iii) தனித்தனி தாவரங்களில் ஆண் மலர், பெண் மலர்

d. அல்லோகேமி - (iv) ஒரே தாவரத்தில் ஆண் மலர், பெண் மலர்

(1) a - ii b - iv c - i d - iii (2) a - iv b - iii c - ii d - i

(3) a - iii b - iv c - ii d - i (4) a - i b - ii c - iii d - iv

96. பொருத்துக.

a. எண்டோமோஃபிலி - (i) காற்று மூலம் மகரந்தச் சேர்க்கை

b. அனிமோஃபிலி - (ii) விலங்குகள் மூலம் மகரந்தச் சேர்க்கை

c. ஹைட்ரோஃபிலி - (iii) பூச்சிகள் மூலம் மகரந்தச் சேர்க்கை

d. சூஃபிலி - (iv) நீரின் மூலம் மகரந்தச் சேர்க்கை

(1) a - ii b - iv c - i d - iii (2) a - ii b - i c - iii d - iv

(3) a - iii b - iv c - ii d - i (4) a - iii b - i c - iv d - ii

97. நேபிஃபார்ம் வடிவத்திற்கு எடுத்துக்காட்டு?

(1) பீட்ரூட் (2) டர்னிப் (3) 1, 2 இரண்டும் (4) கேரட்

98. அவிசீனியா தாவரம் தமிழ்நாட்டில் எங்கு காணப்படுகிறது?

(1) சென்னை (2) பிச்சாவரம் (3) கல்கத்தா (4) டேராடூன்

99. பொருத்துக.

a. குடுவைத் தாவரம் - (i) இலைத்தொழில் கிளை

b. ஃபில்லோடு - (ii) நெப்பந்தஸ்

c. ஃபில்லோகிளாடு - (iii) இலைத்தொழில், இலைக் காம்பு

d. கிளாடோடு - (iv) இலைத்தொழில் தண்டு

(1) a - ii b - iii c - iv d - i (2) a - ii b - i c - iii d - iv

(3) a - iii b - iv c - ii d - i (4) a - I b - ii c - iii d - iv

100. பைசம் சட்டைவம் தாவரத்தில் பற்று கம்பியாக மாறியுள்ள உறுப்பு எது?

LIVEWORKSHEETS

(1) இலையின் நுனி (2) இலைத்தாள் (3) இலைக்காம்பு (4) நுனி சிற்றிலை

**NMMS தேர்வில் கேட்கப்பட்ட வினாக்கள்:**

101. பிரகாசமான நிறமுடைய மலரின் பகுதி _______ எனப்படும். **(NMMS EXAM 2015 - 2016)**

(1) அல்லிவட்டம் (2) புல்லிவட்டம் (3) மகரந்த வட்டம் (4) சூலகவட்டம்

LIVEWORKSHEETS